# வடக்கு, கிழக்கு மாகாணத்தில்

## இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் பணிகள் ( 2012 டிசம்பர்- ஜனவரி 2013)

எமது இலங்கை மாணவர் கல்வி நிதியம், இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் கம்பஹா மாவட்டத்திலும் போரினால் பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த மாணவர்களுக்காக கடந்த 2012 ஆம் ஆண்டு இறுதியிலும் 2013 தொடக்கத்திலும் நடத்திய நிதிக்கொடுப்பனவு நிகழ்வுகள், தகவல் அமர்வு, மற்றும் பாதுகாவலர், கண்காணிப்பாளர் ஒன்றுகூடல் தொடர்பான அறிக்கை. இந்த நிகழ்ச்சிகள் அனைத்திலும் கல்வி நிதியத்தின் துணை நிதிச்செயலாளர் திரு. லெ.முருகபூபதி கலந்துகொண்டார்.

### வவுனியா பல்கலைக்கழக வளாகம்

போரில் பாதிக்கப்பட்டு அகதி முகாமிலிருந்து கல்வியைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு நிகழ்வு **04-12-2012** ஆம் திகதியன்று வளாக முதல்வர் கலாநிதி அருள்வேல் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நிதியத்தின் உதவி பெறும் மாணவர்கள், வளாகத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி ஆர். நந்தகுமார், மற்றும் வளாகத்துறைகளின் தலைவர்கள் கலாநிதிகள் எஸ்.கிருஷ்ணகுமார், மங்களேஸ்வரன், சிரேஷ்ட உதவிப்பதிவாளர் திரு. எம். கணேசலிங்கம், வவுனியாவில் இயங்கும் நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் (VOVCOD) ஸ்தாபகர் திரு. த.கணேஷ். குறிப்பிட்ட அமைப்பின் பிரதிநிதி திரு. அன்ரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் நிதியத்தின் உதவிபெறும் கல்வியில் பின்தங்கியுள்ள சில மாணவர்களுக்கு விடுமுறை காலங்களில் மேலதிக பயிற்சிவழங்குவதற்கு பல்கலைக்கழக மாணவர்கள் முன்வரவேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழக வளாக மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபா (1,80,000-00 ரூபா) இந்நிகழ்வில் குறிப்பிட்ட மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

### முல்லைத்தீவில்

முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் **05-12-2012** ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வுகளுக்கு கல்லூரி அதிபர் திரு. சிவலிங்கம் தலைமைதாங்கினார். உதவிபெறும் மாணவர்களும் அவர்களின் பாதுகாவலர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். கனடாவிலிருந்து வருகைதந்த செல்வி தான்யா, ஊடகவியலாளர் திரு. கருணாகரன் ஆகியோர் உரையாற்றினர். மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவும் வழங்கப்பட்டது. மாணவர்கள் சிலர் தமது சுயஆற்றலை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். எண்பத்தியோரு ஆயிரம் ரூபா (81,000-00) வழங்கப்பட்டது

**பாதணிகள் அன்பளிப்பு** இம்மாணவர்களுக்காக எமது கல்வி நிதியத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய பரிபாலன சபை உறுப்பினருமான மருத்துவகலாநிதி திருமதி மதிவதனி சந்திரானந்த் அவர்கள் அன்பளிப்பாக வழங்கிய மாணவர்களுக்கான பாதணிகளும் காலுறைகளும் ஒப்படைக்கப்பட்டன.

### கிளிநொச்சியில்

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அதிபர் திரு. பங்கயற்செல்வன் தலைமையில் **06-12-2012** ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் உதவிபெறும் மாணவர்களுக்கு நிதிக்கொடுப்பனவு நற்பத்தியைந்தாயிரம் (45,000-00 ரூபா) வழங்கப்பட்டது.

**பயிற்சிக்கொப்பிகள் அன்பளிப்பு:-** கொழும்பில் வதியும் அன்பர் திரு. ராஜ்குமார் என்பவர் எமது கல்வி நிதியத்தின் பணிகளை அறிந்து கிளிநொச்சி மாணவர்களுக்காக வழங்கிய பயிற்சிக்கொப்பிகள் இந்நிகழ்வில் ஒப்படைக்கப்பட்டன.

## யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொண்டுநிறுவனமான 'சிறுவருக்கான அபிவிருத்தி நிலையம்' ஒழுங்கு செய்திருந்த தகவல் அமர்வு சந்திப்பும் கலந்துரையாடலும் **07-12-2012** ஆம் திகதி நிலையத்தலைவர் முன்னாள் யாழ். மாநகராட்சி ஆணையாளர் திரு. சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நிலையத்தின் பணிமனையில் நடைபெற்றது. மறுநாள் 8 ஆம் திகதி கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நிலையத்தின் ஒழுங்கமைப்புச்செயலாளர் திரு. த. பாலதயானந்தன் தலைமையில் மாணவர் நிதிக்கொடுப்பனவும் பாதுகாவலர்- மாணவர் ஒன்று கூடலும் மதியபோசன விருந்தும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகைமைசார் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், யாழ். சிறுவர் நலவுரிமை முன்னேற்ற நிறுவனத்தின் பிரதேச செயலக அலுவலர் திரு. எம். பத்மராஜா ஆகியோர் உரையாற்றினர். யாழ். பல்கலைக்கழக மாணவி செல்வி நிருத்திகா மாணவர்களின் சார்பில் உருக்கமான உரையாற்றினார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளைத்தொடர்ந்து அனைவருக்கும் மதியபோசன விருந்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு நான்கு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபா (4,80,000-00 ரூபா) வழங்கப்பட்டது.

## வவுனியாவில்

வவுனியாவில் இயங்கும் நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் (VOVCOD) பணிமனையில் **22-12-2012** ஆம் திகதி அமைப்பின் பணிமனையில் வவுனியா மாவட்ட மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவும் தகவல் அமர்வும் கலந்துரையாடலும் அமைப்பின் ஸ்தாபகர் திரு. த.கணேஷ் தலைமையில் நடைபெற்றது. வவுனியா பல்கலைகழக மாணவர்கள் சிலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். கடும்மழையையும் பொருட்படுத்தாமல் மாணவர்களும் பாதுகாவலர்களும் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். அனைவருக்கும் நிதியத்தின் சார்பில் மதியபோசன விருந்து வழங்கப்பட்டது.

## திருகோணமலையில்

திருகோணமலை மாவட்ட மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு நிலாவெளியில் இயங்கும் நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் (VOVCOD) பணிமனையில் 14-01-2013 ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று நடைபெற்ற பொங்கல் விழாவில் இடம்பெற்றது. அமைப்பின் பிரதிநிதி திருமதி ராதிகா நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். அமைப்பின் மற்றுமொரு பிரதிநிதி திரு. ரவீந்திரகுமார் கல்வி நிதியத்தின் உதவிகளை பெற்றுக்கொள்ளும் மாணவர்கள் அதனை உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என மாணவர்களுக்கு வலியுறுத்தினார்.

## கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றுகூடல்

கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவும் சந்திப்பும் 15-01-2013 ஆம் திகதி செங்கலடியில் அமைந்துள்ள கத்தோலிக்க தேவாலயத்தில் அமைந்துள்ள சமூக மண்டபத்தில் நடைபெற்றது. கிழக்கு பல்கலைக்கழகத்தில் பயிலும் நிதியத்தின் உதவிபெறும் 26 மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு தற்போது திருகோணமலை நலிவுற்ற அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் (VOVCOD) ஊடாகவே வழங்கப்படுகிறது. கடந்த காலத்தில் பல்கலைக்கழக உபவேந்தர் நிதியத்தின் ஊடாகவே மாணவர்களுக்கு எமது நிதியத்தின் உதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் 26 பேருக்கும் ஒரு இலட்சத்து நான்காயிரம் ரூபா (1,4000-00 ரூபா) வழங்கப்பட்டது.

கல்வி அமைச்சின் விதிமுறைகளுக்கு அமைய தொண்டு நிறுவனங்களின் உதவி, உபவேந்தர் ஊடாக அனுப்புவதில் நடைமுறை சிக்கல்கள் எதிர்நோக்கப்பட்டதனால் VOVCOD அமைப்பின் ஊடாக தற்போது நிதியுதவி குறிப்பிட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு அனுப்பப்படுகிறது. 15 ஆம் திகதி நடைபெற்ற நிதிக்கொடுப்பனவு நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள் தமது பட்டப்படிப்பு நிறைவுற்றதும் பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முடிந்தவரையில் உதவுவதாக உறுதியளித்தனர். இந்நிகழ்விற்கு திரு. த. கணேஷ் தலைமைவகித்தார்

## கல்முனையில்

கல்முனை பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் 16-01-2013 ஆம் திகதி நடைபெற்ற தைப்பொங்கல் விழாவில் பிரதேச கல்வி அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். வித்தியாலய அதிபர் திருமதி சிவமணி நற்குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவிபெறும் மாணவர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது.

## கம்பஹா மாவட்டத்தில்

போரினால் இடம்பெயர்ந்து கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் பயிலும் மூன்று மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு நிகழ்வு 24-01-2013 கல்லூரி அதிபர் திரு. ந. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. நிதிக்கொடுப்பனவு பதின்மூவாயிரத்து ஐநூறு ரூபா (13,500-00 ரூபா) வழங்கப்பட்டது.

## நற்செய்தி

எமது கல்வி நிதியத்தினால் பயனடைந்த மாணவர்கள் சிலர் தமது பல்கலைக்கழக கல்வியை முடித்து பட்டதாரிகளாகி தொழில் வாய்ப்பு பெற்றுள்ளதையும் சிலர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதையும் சமகாலத்தில் அறிந்துகொள்ளமுடிந்தது. சில மாணவர்கள் சமீபத்திய நிதியத்தின் இலங்கை நிகழ்வுகளின்போது நிதியத்தின் பிரதிநிதி துணை நிதிச்செயலாளர் திரு. லெ. முருகபூபதியை நேரில் சந்தித்து தமது தற்போதைய தொழில் - பதவி பற்றி விளக்கியதுடன் கல்வி நிதியத்திற்கும் இதுவரை காலம் உதவிய அன்பர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

பெயர்விபரம் வருமாறு:

**1.திருமதி கிருஷ்ணவேணி சுப்பையா – அதிபர் வ- சைவப்பிரகாச தொடக்கநிலைப்பாடசாலை**

**(உதவிய அன்பர்: திரு.லெ.முருகபூபதி)**

**2. செல்வி பாமினி செல்லத்துரை – திட்ட அதிகாரி கொழும்பு கம்பனிகள் பதிவாளர் திணைக்களம். (உதவிய அன்பர் திரு. நவீன் நடேசன்)**

**3. செல்வி வி.லோஜினி – ஆசிரியை நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லாரி.**

**( உதவிய அன்பர் திரு. எஸ்.திருக்குமரன்)**

**4. செல்வி. எம். ரேணுகா – ஆசிரியை நீர்கொழும்பு அல். ஃபளால் மகா வித்தியாலயம்.**

**(உதவிய அன்பர்: திருமதி நிரூபா ரூபிச்சந்திரன்)**

## கல்வி நிதிய உறுப்பினர்களின் நன்கொடை

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் மாணவர்களுக்கும் அவர்களின் பாதுகாவலர்களுக்கும் மதியபோசனவிருந்து வழங்கப்பட்டது. அதற்கான செலவுகளுக்காக நிதியத்தின் உறுப்பினர்கள் திருமதிகள் கோசலா நடனகுமார், அருண்.விஜயராணி, வித்தியா ஸ்ரீஸ்கந்தராஜா, துளசி கிருஷ்ணகுமார், தமயந்தி சோமஸ்கந்தன், மாலதி முருகபூபதி ஆகியோர் நன்கொடைகள் வழங்கினர். நிதியத்தின் முன்னாள் தலைவர் மருத்துவகலாநிதி திருமதி மதிவதனி சந்திரானந்த் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவர்களுக்கு பாதணிகள் அன்பளிப்பு செய்தார். இவர்கள் அனைவருக்கும் நிதியம் நன்றி தெரிவிக்கின்றது.

## நன்றி

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஊடாக போரில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தொடர்ந்தும் உதவும் அன்பர்களுக்கும் நிதியத்தின் பணிகளை உடனுக்குடன் செய்தியாக வெளியிட்ட ஊடகங்களுக்கும் இணைய இதழ்களுக்கும் நிதியத்தின் மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றோம்

## கல்வி நிதியத்தின் வங்கிக்கணக்கு விபரம் (Bank Details)

**A/C Name: Ceylon Students Educational Fund (inc)**

**Bank: Commonwealth Bank of Australia**

**Branch: Brunswick, Victoria 3056, Australia**

**BSB No: 063 111      A/C No: 1063 4651**

**E.Mail: kalvi.nithiyam@yahoo.com      Web: www.csefund.org**

Mrs. Arun.Vijayarani (Chairman) 03 9499 7176

Mr. S.Cornelius ( Secretary ) 0425 728 839

Mrs. Vithiya Sriskantharajah ( Treasurer) 03 9444 6916, 0404 808 250

Mr/ L.Murugapoopathy (Asst. Treasurer) 0416 625 766